*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 214/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-7 (LW-11)***

*Name / Father's Name:* ***திரு.மோகன்ராஜ் த/பெ. வெள்ளைச்சாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11.06.2026.**

துவக்க நேரம் 03.56 A.N

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தமிழ்நாடு காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து பணிஓய்வு பெற்று வீட்டில் இருக்கிறேன். கடந்த 30.01.2021 அன்று நான், வட்ட ஆய்வாளராக கருமந்துறை காவல் நிலையத்தில் பணிபுரிந்தபொழுது, கருமந்துறை காவல் நிலைய பொறுப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.வீரமுத்து என்பவர் நிலைய அலுவலலில் இருந்தபொழுது, கருமந்துறை காவல் நிலைய த.கா காந்தி என்பவர், சேலம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த புகார்தாரர் திரு.லட்சுமணன் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று வந்து, காவல் உதவி ஆய்வாளர் திரு.வீரமுத்து அவர்களிடம் ஒப்படைத்ததை, திரு.வீரமுத்து அவர்கள் பரிசீலனை செய்து, புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப எதிரிகளான கோவிந்தன், ராமர், ஈஸ்வரன், திருப்பதி, கோவிந்தராஜ் மற்றும் பாப்பாயி ஆகியோர்கள் மீது நிலைய குற்ற எண்.37/2021 இ.த.ச. பிரிவுகள் 147, 148, 341, 294(b), 324, 506(2) 379- ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்னர் அசல் ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு, வழக்கினை விசாரணைக்காக வேண்டி எனது பார்வைக்கு வைத்தார்.

2) நான் இவ்வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மாலை 04.30 மணியளவில் சம்பவயிடத்திற்கு சென்று சம்பவயிட சாட்சிகள் ராஜாராம் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பின்பு சாட்சிகள் லட்சுமணன், சடையன், வெங்கடேசன், உண்ணாயி, வனிதா, பாஸ்கர் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) நான் விசாரித்த சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரிகளான ராமர், திருப்பதி, கோவிந்தராஜ் மற்றும் பாப்பாயி ஆகியோர்களை இவ்வழக்கிலிருந்து நீக்கி எதிரிகள் நீக்கல் அறிக்கை தயார் செய்து, இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 147, 148, 341, 294(b), 324, 506(2) 379 இதச–விலிருந்து 341, 294(b), 324, 506(1)–இதச ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். பின்பு நான் பணிமாறுதல் பெற்றதால் வழக்குக்கோப்பினை காவல் உதவி ஆய்வாளர் திரு.வீரமுத்து அவர்களிடம் ஒப்படைத்தேன்.

4) காவல் உதவி ஆய்வாளர் திரு.வீரமுத்து என்பவர் தற்பொழுது இறந்துவிட்டதாலும், இவ்வழக்கின் நலன் கருதியும், காவல் உதவி ஆய்வாளர் தாக்கல் செய்துள்ள இறுதியறிக்கையை குறித்து மீதமுள்ள வழக்கு விசாரணையை குறித்து, நான், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

5) நான் வழக்கினை ஒப்படைத்த பின்னிட்டு, காவல் உதவி ஆய்வாளர் திரு.வீரமுத்து அவர்கள் இவ்வழக்கின் எதிரிகளான கோவிந்தன், ஈஸ்வரன், லட்சுமணன் ஆகியோர்களை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

6) பின்பு இவ்வழக்கில் காயமுற்ற லட்சுமணன் என்பவருக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் திரு.கெங்கணசாமி என்பவரை, காவல் உதவி ஆய்வாளர் விசாரித்து விபத்து பதிவேட்டுடன் இணைந்த காயச்சான்றிதழ் பெற்றுள்ளார்.

7) பின்பு புகார் வாக்குமூலம் பெற்று வந்த தலைமைக்காவலர் திரு.காந்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் சம்பவம் உண்மை எனத் தெரிய வந்ததால் புலன் விசாரணையை முடித்து ச.பி 341, 294(b), 324, 506(1)–இதச வின் கீழ் எதிரிகள் கோவிந்தன், ஈஸ்வரன், லட்சுமணன் ஆகியோர்களுக்கெதிராக குற்ற இறுதி அறிக்கையை, காவல் உதவி ஆய்வாளர் திரு.வீரமுத்து அவர்கள் தாக்கல் செய்துள்ளார்.

**முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3, பார்வை மகஜர் அ.த.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5, எதிரிகள் நீக்கல் அறிக்கை அ.த.சா.ஆ.6, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.7, விபத்து பதிவேட்டுன் இணைந்த காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.8 ஆகும்.**

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) இவ்வழக்கில் இறுதியறிக்கை தாக்கல் செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.வீரமுத்து என்பவர் தற்பொழுது இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான்தான் என்றால் சரிதான்.

2) எதிரிகள், புகார்தாரருக்கு எதிராக கொடுத்த புகாரின் பேரில் கருமந்துறை காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இந்நீதிமன்றத்தில் CC.No.328/2021 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

3) இவ்வழக்கின் புகார்தாரர் கொடுத்த புகாரில், கட்டையாலும், கம்பியாலும் தாக்கியதாக சொல்லி புகார் அளித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நிலையில் மேற்படி சான்றுபொருட்களை நான் எனது புலன் விசாரணையில் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரிதான்.

4) மேற்படி கட்டை மற்றும் கம்பி குறித்து நான் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகள், புகார்தாரரை திட்டியதாக சொல்லியுள்ள நிலையில், புகார்தாரர் பொதுமக்கள் முன்னிலையில், எதிரிகள் திட்டியதால்

அவருக்கு அசிங்கம் ஏற்பட்டதாக புகார் அளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகள், புகார்தாரருக்கு அளித்த கொலைமிரட்டலால் புகார்தாரருக்கு உயிர்பயம் ஏற்பட்டதாக புகார்தாரர் அவரது புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

5) லட்சுமணன் தனது போலிசார் விசாரணையில், புகார்தாரரின் பாக்கெட்டில் வைத்திருந்த 32,500/- ரூபாய் பணமும், லாவா பட்டன் செல்லும் எடுத்துக்கொண்டதாக சொல்லி புகார் கொடுத்தால்தான் எதிரிகள் மீது பெரிய வழக்கு போடப்படும் என்று சொன்னதாக லட்சுமணன் தனது 161 வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

6) புகார்தாரருக்கும், எதிரிகளுக்குமிடையே சிவில் வழக்கு நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், ஆனால் அது என்ன வழக்கு என்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. நான், இவ்வழக்கு சம்மந்தமாக சம்பவயிடத்திற்கு சென்று விசாரணை செய்யாமல், காவல் நிலையத்தில் வைத்து அனைத்து ஆவணங்களையும் வரவழைத்து, சாட்சிகளை காவல் நிலையத்திற்கு வரவழைத்து கையெழுத்து பெற்று, புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை பெற்று, சரிவர விசாரிக்காமல் இவ்வழக்கில் எதிரிகளுக்கெதிராக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 04.38 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.06.11 18:44:46 +0530

Judicial Magistrate No.2, Attur.